**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – 2011–12–ஆம் ஆண்டில் புதிய திட்டத்தின் கீழ் 50 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு புதிய அரவை இயந்திரங்கள் ரூ.6.25 இலட்சம் செலவில் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந 1)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 11** **நாள். 25.1. 2012**

**படிக்கப்பட்டது :**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். சி2/5303/2011, நாள். 14.9.2011.

------

**ஆணை:**

சட்டமன்றப் பேரவையில் 23.8.2011–ஆம் நாளன்று இத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் “நடப்பு நிதியாண்டில் (2011–12) 50 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு புதிய அரவை இயந்திரங்கள் ரூ.6.25 இலட்சம் செலவில் வழங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கான அரவை இயந்திரங்கள் பல்வேறு காலகட்டங்களில் வழங்கப்பட்டன என்றும், இவற்றில் பல 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளன என்றும், இதனால் மாணவர்களுக்கு தயாரிக்கப்படும் இட்லி மாவு, சட்னி போன்றவை அரைப்பதற்கு தனியார் அரவை நிலையங்களில் கட்டணம் செலுத்தி அரைக்கப்படுகிறது என்றும், இதற்காகும் செலவினை நோக்கும் போது புதிதாக அரவை இயந்திரம் வாங்கும் தொகைக்கு இணையாக உள்ளது என்றும், எனவே மொத்தம் 50 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு (30 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் + 15 மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் + 5 சீர்மரபினர் விடுதிகள்) புதிய மாவரைக்கும் இயந்திரங்கள் தலா ரூ.12,500/–க்கு மிகாமல் மொத்தம் ரூ.6.25 இலட்சம் செலவில் வழங்கவும் மற்றும் திறந்தவெளி ஒப்பந்தபுள்ளி சட்டம், 1998 மற்றும் அதன் விதிகள் 2000–இன்படி புதிய அரவை இயந்திரங்கள் வாங்கி வழங்க சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களின் ஒப்புதல் பெற்று அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் வாங்கி வழங்க அதிகாரம் அளிக்கலாம் என்றும், புதிய அரவை இயந்திரங்கள் தேவைப்படும் விடுதிகள் குறித்த

பட்டியலை இறுதி செய்யும் அதிகாரத்தினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இயக்குநர்களுக்கு அளிக்கலாம் என்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று 30 பிற்படுத்தப்பட்ட, 15 மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் 5 சீர்மரபினர் நல விடுதிகள் ஆக மொத்தம் 50 விடுதிகளுக்கு நடப்பு நிதியாண்டில் (2011–2012) புதியதாக மின்சாரத்தால் இயங்கும் மாவரைக்கும் அரவை இயந்திரங்கள் தலா ரூ.12,500/– மதிப்பிற்கு மிகாமல் மொத்தம் ரூ.6.25 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) செலவில் வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்தும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் விடுதிகளுக்கு பழுதடைந்த, உபயோகமற்ற அரவை இயந்திரங்களுக்கு பதிலாக தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000–ஐ பின்பற்றி புதிய அரவை இயந்திரங்கள் வாங்கி வழங்க அதிகாரம் அளித்தும், புதிய அரவை இயந்திரங்கள் தேவைப்படும் விடுதிகள் குறித்த பட்டியலினை முடிவு செய்யும் அதிகாரத்தினை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோருக்கு வழங்கியும் ஆணையிடுகிறது.

4. பழைய அரவை இயந்திரங்கள் இருக்குமாயின் அவைகளை ஏலம் விட்டு அதில் வரும் தொகைகளை அரசு கணக்கில் செலுத்துமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>1. பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் – ரூ.3,75,000/– (30x12,500/–)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 24 – பொருள்களும் வழங்கலும்".
(து.தொ.கு. 2225–03–277–JA-2408)

<u>2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் – ரூ.1,87,500/– (15x12,500/–)</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 24 – பொருள்களும் வழங்கலும்".
(து.தொ.கு. 2225–03–277–KA-2407)

**<u>3. சீர்மரபினர் நல விடுதிகள் – ரூ.62,500/– (5x12,500/–)</u>**

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது 101 – சீர்மரபினர் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH - சீர்மரபினர் மாணவரில்லங்கள் – 24 – பொருள்களும் வழங்கலும்”.
(து.தொ.கு. 2225–80–101-JH-2402)

6. இத்திட்டத்திற்கான நிதி 2011–2012–ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கப்படும். இதனை எதிர்நோக்கி செலவினம் மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் அனுமதிக்கப்படுகின்றனர். 2011–2012 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதி ஒதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பும்போது இதனையும் சேர்த்து அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 1954/பிமிபி/2012, நாள் 23.1.2012 –ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1480 (ஆயிரத்து நானூற்று எண்பது).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கோ.சந்தானம்,**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்:
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை – 5.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18 /(பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 1), சென்னை – 18 /(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 2), சென்னை – 18 /(பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
**<u>நகல்</u> :**
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
நிதி (வ.செ./ பொது 2/ பி.மி.பி)த் துறை, சென்னை – 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3) த்துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

# இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.11, பி. மி.பி. (ம) சி.நலத்துறை, நாள். 25.1.2012–ன்படி 2011–12–ஆம் ஆண்டில் அரவை இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 50 பி, மி.பி. (ம) சீ.ம. நல விடுதிகளின் விவரம்

| வ.எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் |
|---|---|---|
| **பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்** | | |
| 1. | காஞ்சிபுரம் | கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம். |
| 2. | | கல்லூரி மாணவியர் விடுதி, காஞ்சிபுரம். |
| 3. | | பள்ளி மாணவர் விடுதி, காஞ்சிபுரம். |
| 4. | | பள்ளி மாணவர் விடுதி, உத்திரமேரூர். |
| 5. | வேலூர் | கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி. |
| 6. | | கல்லூரி மாணவியர் விடுதி, காட்பாடி. |
| 7. | தஞ்சாவூர் | கல்லூரி மாணவியர் விடுதி, பட்டுக்கோட்டை. |
| 8. | கடலூர் | பள்ளி மாணவர் விடுதி, புவனகிரி. |
| 9. | | பள்ளி மாணவர் விடுதி, கருப்பேரி. |
| 10. | | பள்ளி மாணவியர் விடுதி, சேத்தியாத்தோப்பு |
| 11. | | பள்ளி மாணவர் விடுதி, கிள்ளை. |
| 12. | | பள்ளி மாணவர் விடுதி, மஞ்சக்கொல்லை. |
| 13. | திருச்சி | கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை. |
| 14. | திண்டுக்கல் | கல்லூரி மாணவியர் விடுதி, கொடைக்கானல் |
| 15. | | பள்ளி மாணவர் விடுதி, இடையார்க்கோட்டை. |
| 16. | | பள்ளி மாணவர் விடுதி, கீரனூர். |
| 17. | திருநெல்வேலி | பள்ளி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை. |
| 18. | கன்னியாகுமரி | பள்ளி மாணவியர் விடுதி, கோவளம். |
| 19. | | பள்ளி மாணவியர் விடுதி, நாகர்கோவில். |
| 20. | | கல்லூரி மாணவியர் விடுதி, அகஸ்தீஸ்வரம். |
| 21. | | கல்லூரி மாணவியர் விடுதி, சுங்கான்கடை. |
| 22. | | பள்ளி மாணவியர் விடுதி, அழகப்பாபுரம். |
| 23. | | பள்ளி மாணவியர் விடுதி, நாகர்கோவில். |
| 24. | | பள்ளி மாணவர் விடுதி, மார்த்தாண்டம். |
| 25. | சேலம் | பள்ளி கல்லூரி மாணவியர் விடுதி, கோரிமேடு. |
| 26. | நீலகிரி | பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதி, உதகை. |
| 27. | | கல்லூரி மாணவர் விடுதி, கூடலூர். |
| 28. | | பள்ளி மாணவர் விடுதி, குன்னூர். |
| 29. | | பள்ளி மாணவர் விடுதி, கோத்தகிரி. |
| 30. | புதுக்கோட்டை | கல்லூரி மாணவியர் விடுதி, புதுக்கோட்டை. |

| | | |
|---|---|---|
| **மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்** | | |
| 31. | காஞ்சிபுரம் | கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு. |
| 32. | | பள்ளி மாணவர் விடுதி, மதுரமங்கலம். |
| 33. | | பள்ளி மாணவர் விடுதி, வாலாஜாபாத். |
| 34. | | பள்ளி மாணவர் விடுதி, நந்திவரம். |
| 35. | | பள்ளி மாணவியர் விடுதி, உத்திரமேரூர். |
| 36. | | பள்ளி மாணவியர் விடுதி, திருப்போரூர். |
| 37. | கடலூர் | பள்ளி மாணவர் விடுதி, காட்டுமன்னார்கோயில். |
| 38. | | பள்ளி மாணவர் விடுதி, கீரப்பாளையம். |
| 39. | | கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாசலம். |
| 40. | வேலூர் | கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாபேட்டை. |
| 41. | | கல்லூரி மாணவர் விடுதி, வேலூர். |
| 42. | | பள்ளி மாணவர் விடுதி, நாட்ராம்பள்ளி. |
| 43. | திண்டுக்கல் | பள்ளி மாணவர் விடுதி, ஒட்டன்சத்திரம். |
| 44. | | பள்ளி மாணவியர் விடுதி, கள்ளிமந்தையம் |
| 45. | திருவண்ணாமலை | பள்ளி மாணவர் விடுதி, பூதேரிபுலவாக்கம், செய்யார். |
| **சீர்மரபினர் நல விடுதிகள்** | | |
| 46. | காஞ்சிபுரம் | பள்ளி மாணவியர் விடுதி, அனகாபுத்தூர். |
| 47. | புதுக்கோட்டை | பள்ளி மாணவர் விடுதி, புதுக்கோட்டை. |
| 48. | | கல்லூரி மாணவியர் விடுதி, புதுக்கோட்டை–I. |
| 49. | திண்டுக்கல் | பள்ளி மாணவர் விடுதி, என். பஞ்சம்பட்டி. |
| 50. | திண்டுக்கல் | பள்ளி மாணவியர் விடுதி, சித்தையன்கோட்டை. |

கோ. சந்தானம்,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.